Registered with the Registrar of NewsPapers for India R. No: 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No: TN / CC (S) DN / 51 / 09-11 |

வேணு : 15 பிப்ரவரி 2010 கானம் 7



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani, of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
E-mail : contact@namadwaar.org

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளீ

தெய்வீக மாதப் பத்திரிகை

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ முல்லைவாசல் Dr. க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுடன் ஸ்ரீஸ்வாமிஜி




சென்னை நாரதகானசபா ஸ்ரீமத்பாகவத சப்தாஹ பூர்த்தி ஜனவரி 18/1/2010 அன்று

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 15 பிப்ரவரி 2010 கானம் 7



ஜனவரி 1 MAGIC SPELL
மஹாமந்திர கூட்டுப்ரார்த்தனை
விவேகானந்தா வித்யாலயா,
குரோம்பேட்டை சென்னை







GOD இந்தியா டிரஸ்டு சார்பாக , ஜனவரி 23 அன்று தேனாம்பேட்டை காமராஜர் அரங்கில் மாணவமணிகளுக்கான மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. மேல் , இடது நடு – உரை ஆற்றிய அன்பர்கள்; கீழ் , வலது நடு – அரங்கத்தினுள் ஒரு பார்வை.








ஜனவரி 1, அசோக்நகர் மஹோதயா ஹாலில் காலை ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனம் மற்றும் உபன்யாசம்

டிசம்பர் 28, மஹாரண்யம் அரசு பாலர் பள்ளிக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்டு சார்பாக மதுரபுரி ஆஸ்ரமத்தில் வழங்கப்பட்டது.





திருச்சிராப்பள்ளியில் புதிய "நாமத்வார்" ஜனவரி 17 அன்று ஸ்ரீ.T.S.ராமச்சந்திரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திருச்சி மற்றும் தூத்துக்குடியிலிருந்து நூறு அன்பர்கள் இதில் கலந்து கொண்டனர்.



சென்னை ப்ரேமிக பவனத்தில் ஜனவரி 14 பொங்கல் அன்று சூர்யநாராயணருக்கு பூஜை



மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் ப்ரதிஷ்டாதினம் ஜனவரி 20

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:15　　பிப்ரவரி 2010　　கானம்:7

உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனம் | 02 | பாகவத பழம் -19 | 12 |
| மதுரமான மஹனீயர் - 167 | 03 | பாலகர்களுக்கு ஒரு கதை | 27 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 29 |
| சிந்தனை மலர்கள் | 08 | மாலே மணிவண்ணா - 81 | 32 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**பக்தானாமேவ சர்வேஷாம் சரிதம் "குருஜீ" வதன்।**
**தத்தத்ரூபமவாப்யேவ த்ருஶ்யதே ஶ்ரோத்ருபி: ஸதா॥**
**தர்மான் பாகவதாம்ஶ்சைவ வைதிகான் போஷயன் ஸதா।**
**ராஜதே குருவர்யோऽயம் வர்ததாம் ஶரத: ஶதம்॥**

**ஸ்ரீகுருஜி அவர்கள் பக்தர்களின் சரித்திரத்தை எடுத்துரைக்கும்பொழுது, அந்தந்த பக்தர்கள் வடிவமாகவே தான் தன்மயமாகி விடுவதை, கேட்பவர்கள் யாவரும், பார்க்கும் மற்றும் அனுபவிக்கும் (பாக்கியம்) நிலை ஏற்படுகிறது.**

**பாகவத தர்மங்களையும் மற்றும் வைதீக தர்மங்களையும் போஷித்து வருவதையே தன் முழு மூச்சாகக் கருதி பல பல ஸ்தாபனங்களை ஏற்படுத்தியுள்ள, குருஜி அவர்கள், பல்லாண்டு பல்லாண்டு மேன்மேலும் கீர்த்தியுடன் வாழ ராதாக்ருஷ்ணனை வேண்டுவோம்.**

*-மஹாமஹோபாத்யாய முல்லைவாசல்* Dr. *ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்*



## ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: ஸிம்மேந்திர மத்யமம்　　தாளம்: ஆதி



பல்லவி

ஸ்ரீராமதூதம் ஶிரஸா நமாமி
ஸீதாஶோகஹரணம் மனஸா ஸ்மராமி (ஸ்ரீ)

அனுபல்லவி

ஜனன - மரண - ஜரா- வ்யாதி - சோக ரஹிதம்
த்யாக - யோக - வேக - ஸஹிதம் (ஸ்ரீ)

சரணம்

நிரஸ்த ஸாம்யாதிஶய வைபவம்
நிரந்தர தாரக நாம ப்ரபாவம்
நாநாவித - சாஸ்த்ர - பாரங்கதம்
நரநாராயண ரத த்வஜாலங்காரம் (ஸ்ரீ)

(கேரளாவில் உள்ள திருப்ரையாறில் சமீபத்தில் நடந்த ஸ்ரீமத்ராமாயண நவாஹத்தின்பொழுது பாடிய கீர்த்தனம்)

## மதுரமான மஹனீயர் - 167

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

முக்தி என்ற சொல் கேட்பதற்கும், படிப்பதற்கும் நன்றாகத்தான் உள்ளது. ஆனால், முக்தி உடனே கிடைக்கும் என்றால், எவ்வளவு பேர் தயாராக இருப்போம் என்பதை விளக்க ஸ்ரீஸ்வாமிஜி ஒரு கதை சொன்னார்.

நாய் ஒன்று மிகவும் சிரமப்பட்டு கொண்டிருந்தது. அதற்கு ஒரு கண் தெரியாது. உடம்பெல்லாம் சொறி; நொண்டி அடித்துக்கொண்டுதான் நடக்கும். அதன் வால் வேறு அறுபட்டிருந்தது. அது படும் வேதனையை கண்டு பொறுக்காத இறைவன், அதனிடம் சென்று "நீ பட்ட துயரமெல்லாம் போதும். என் உடன் வந்து விடு" என்றார். அந்த நாய் இறைவனை பார்த்து, "பக்கத்து தெருவில் உள்ள ஒரு நாய், நான் இருக்கும் இந்த தெருவையும் ஆக்கிரமிக்க பார்க்கின்றது. நானும் அதை வரவிடாமல், விரட்டி விரட்டி துரத்தி விடுகின்றேன். இந்த நிலையில், நீங்கள் என்னை அழைத்தால் என்னால் எப்படி வர முடியும்? நான் உங்களுடன் வந்து விட்டால் அந்த நாய் என்னுடைய இடத்தை அல்லவா பிடித்து கொண்டு விடும்?" என்று கூறி வர மறுத்து விட்டது.

பக்கத்தில் ஒரு பன்றியை பார்த்தார். அது மலம் தின்று கொண்டிருந்தது. அதை மோக்ஷத்திற்கு கூப்பிட்டார். அதுவோ, "இந்த மலத்தின் சுவை எத்தகையது என்பது உங்களுக்கு தெரியுமா? ஒருநாளாவது இவற்றை எல்லாம் சாப்பிட்டு இருந்தால்தானே, இதன் அருமை உங்களுக்கு தெரியபோகின்றது" என்று கூறி சென்று விட்டது.

மற்றொரு இடத்தில், பாசி படர்ந்த ஒரு குட்டையில் ஒரு எருமை மாடு இருந்தது. அதை அழைத்தார். அதுவோ, "இந்த சாக்கடை குட்டையில் ஊறுகின்ற சுகம் எத்தகையது தெரியுமா?



இதற்கு ஈடு இணை ஈரேழு உலகங்களிலும் இருப்பதாக தெரியவில்லை" என்று இறைவனிடம் கூறி வர மறுத்தது.

துணிகளை துவைப்பவர் ஒருவர், தினமும் தன்னுடைய கழுதையை அடி அடி என்று அடிப்பார். அது ஒரு குட்டி சுவற்றின் அருகாமையில் நின்று கொண்டிருந்தது. இறைவன் அதை அழைத்தார். "நான் தினமும் எவ்வளவு பொதி சுமந்தால்தான் என்ன? அடிவாங்கினால்தான் என்ன? இந்த குட்டி சுவரின் அருகில் நான் காணும் சுகமே தனி. நான் எங்கும் வரவில்லை" என்று கூறி, கழுதையும் வர மறுத்து விட்டது.

யானை ஒன்றை யானைப்பாகன் பலவிதத்திலும் இம்சை செய்து வந்தான். காட்டிற்கு அழைத்து சென்று, மரங்களை சாய்க்க சொல்லி அதை துன்புறுத்துவான். அதுபடும் துன்பங்களுக்கு ஒரு எல்லையே இல்லை. கடைசியாக, இறைவன் யானையிடம் சென்று, அதனை அழைத்தான். அதுவோ, "இந்த யானைப்பாகனை ஒரு நாள் பழி வாங்க வேண்டும் என்று மனதில் கறுவி கொண்டிருக்கின்றேன். அதை நிறைவேற்றாமல் நான் வர மாட்டேன்" என்று கூறி விட்டது. இறைவனுக்கு தலை சுற்ற ஆரம்பித்தது. தட்டு தடுமாறி தன் இருப்பிடம் போய் சேர்ந்தான்.

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

# PREMIKA VIDYA KENDRA GRIHAPRAVESH

GURGAON, HARYANA. 16-2-2010 TO 18-2-2010

## SATSANG CONGREGATION

On the occassion of the Grihapravesh of "PREMIKA VIDYA KENDRA' - SRI SANDEEPANI GURUKULAM, PLOT NO.1816, SECTOR 10A, GURGAON, HARYANA, the Recital and Discourse of **PREMIKA BHAGAVATAM** also known as **BRINDAVANA MAHATMYA** by **Paranur Mahatma SRI SRI KRISHNA PREMI MAHARAJ** will be held from 16-2-2010 (TUE) TO 18-02-2010 (THU) (4th to 6th of Maagha month in the year of Virodhi)

This Holy Text **PREMIKA BHAGAVATAM** also known as **BRINDAVANA MAHATMYA** was bestowed by **Mahatma SRI SRI KRISHNA PREMI MAHARAJ** of Paranur, South India.

The recital of the original text will take place in the morning and **Discourse in evening will be delivered by Paranur Mahatma SRI SRI KRISHNA PREMI MAHARAJ** everyday in morning and evening. During this function, the Hindi translation of **BRINDAVANA MAHATMYA** will be released. We welcome all devotees to participate in this satsang and be recepients of the Boundless Grace of Sri Radha Krishna Yugala Sarkar and Sri Sadguru

**Programme**

16-02-2010: 8AM - Welcoming of **Sri Sri Krishna Premi Maharaj**

*16/02/2010 to 18/02/2010*

| | |
|---|---|
| 9AM | - Recital of Brindavana Mahatmya |
| 10AM | - Discourse by **Sri Sri Krishna Premi Maharaj** in Hindi |
| 12 Noon | - Pooja and Sadhu Seva |
| 2 - 4PM | - Bhajan |
| 4 - 6PM | - Discourse by **Sri Sri Krishna Premi Maharaj** in Hindi and Aaarathi |

Hereby, Trustees

SRI SANDEEPANI GURUKULA TRUST



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

***கேள்வி: சில நாட்களில் நான், அதிகமாக நாம ஜபம் செய்கின்றேன். சில நாட்களிலோ நாம ஜபம் செய்யாதது மட்டுமல்ல, மனது உலக விஷயங்களை பற்றி அதிகமாக சிந்திக்கின்றது. இதை எப்படி மாற்றி அமைப்பது?***

பதில்: உணவை, உங்களுடைய வீட்டில் இருக்கும் ஸ்ரீக்ருஷ்ணனின் திவ்யமான படத்திற்கு அர்ப்பணிக்காமல் அது எந்த உணவாக இருந்தாலும் அதை உட்கொள்ளாதீர்கள். உடை புதியதாக வாங்கியவுடன், ஸ்ரீக்ருஷ்ணனுடைய திவ்யமான படத்திற்கு சமர்ப்பித்து விட்டு, உடுத்தி கொள்ளவும். எந்த ஒரு பணத்தையும், அவருக்கு அர்ப்பணம் செய்து விட்டு செலவழிக்கவும். இப்படி தொடர்ந்து செய்து வர, தங்கள் தவ வாழ்க்கையில், நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

***கேள்வி: நான் பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்துள்ளேன். நல்லதுதானே?***

பதில்: இப்படித்தான் ஒரு பக்தர், தன் நண்பரிடம் நான் இதுவரை இருபத்து ஐந்து முறை பண்டரிபுரம் சென்று வந்துள்ளேன் என்றார். அவ்வளவுதான்! அதை கேட்டவுடன், கேட்டவர், தனக்கு "எப்பொழுதுதான் பண்டரீ யாத்திரையும், பாண்டுரங்க தரிசனமும் கிடைக்க போகின்றதோ" என்று கதறி விட்டார். அவர் சமாதானம் அடைவதற்கு பல மணிநேரங்கள் ஆகிவிட்டது. சொன்னவர் அப்படியே திகைத்துவிட்டார். அழுதவரின் கால்களை பிடித்து கொண்டு, "நான் எவ்வளவு க்ஷேத்திரங்களுக்கு சென்றிருக்கின்றேனோ அதன் புண்யத்தையெல்லாம் தங்களுக்கு தந்து விடுகின்றேன். அதற்கு பதிலாக, தங்களது தவிப்பையும் ஏக்கத்தையும் எனக்கு தந்து விடுங்கள்" என்று கெஞ்ச ஆரம்பித்து விட்டார்.

**கேள்வி: மோக்ஷத்திற்காக சரணாகதி செய்ய வேண்டுமா அல்லது நாமகீர்த்தனமே போதுமா?**

பதில்: வீதியில் நாம் நடந்து கொண்டிருக்கின்றோம். அப்பொழுது ஒரு திருடன் நம்மை துரத்தி கொண்டு வருகின்றான். நம்மிடம் இருக்கும் பொருள்களை அபகரிக்க பார்க்கின்றான். நாம் உடனே அலறி அடித்து கொண்டு POLICE POLICE என்று கத்துகின்றோம். அப்பொழுது பக்கத்தில் இருக்கின்ற POLICE நம்முடைய உதவிக்கு ஓடி வருவார். அப்படி இல்லாமல், "நீங்கள் கூப்பிட்டால் மட்டும் போதாது. ஓடி வந்து என் காலில் விழுந்து, உங்களை சரணாகதி செய்கின்றேன் என்னை காப்பாற்றுங்கள் என்றெல்லாம் கூற வேண்டும்" என்று கூற மாட்டார் அல்லவா? ஸம்ஸாரத்தில் படும் எவ்வளவோ துக்கங்களின் நடுவே, ஜீவன் இறைவனுடைய நாமங்களை கூறுவதே, வாசிக சரணாகதிதான்.


PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Zaah TECHNOLOGIES


OUR SOLUTIONS


- SEARCH ENGINE OPTIMIZATION
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- WEB DEVELOPMENT

M/s. Zaah Technologies India Pvt. Ltd.,




## ஸ்ரீஸ்வாமிஜியின் சிந்தனையில் உதித்த மலர்கள்





❋ ஸ்ரீராமாவதாரத்திற்கு முன்பே வசிஷ்டர், வால்மீகி போன்ற ரிஷிகள் 'ராம' நாமத்தை ஜபம் செய்து முக்தி அடைந்தார்கள். ராமருடைய சம காலத்தில், சபரி ஜபம் செய்து, ராமர் பார்த்துக் கொண்டு இருக்கும்பொழுதே முக்தி அடைந்தாள். ராமருடைய காலத்திற்கு பிறகும், இன்று வரை, ஹனுமார் ராம நாமத்தை ஜபம் செய்து வருகின்றார். ராம நாமம் சாஸ்வதமானது.



❋ புத்தி சாதுர்யத்தில் பிருஹஸ்பதிக்கு சமமான ராமபிரான், முதல்முறை சுக்ரீவனை வாலியுடன் யுத்தத்திற்கு அனுப்பிய பொழுது, தங்கள் இருவருக்கும் இடையில், எனக்கு வித்தியாசம் தெரியவில்லை என்று கூறுவது சற்று பொருத்தமாக இல்லை. அதற்காக மறுமுறை சுக்ரீவனுக்கு மாலை போட்டு அனுப்புகின்றார். அதாவது, நேற்றுதான் உதை வாங்கி சென்ற சுக்ரீவன் மீண்டும் வருகின்றான். அதுவும் யுத்தத்திற்கு வருகின்றவன் எங்காவது மாலை போட்டு கொண்டு வருவானா? என்பதையெல்லாம் வாலி சிந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் தருவது போல்தான் இது அமைந்துள்ளதாக நான் நினைக்கின்றேன்.



* கோபாலன் வீட்டில் யாரும் இல்லை. எல்லோரும் வெளியில் சென்று இருந்தார்கள். வீடு கதவுகளை எல்லாம் பத்திரமாக பூட்டி விட்டு, தனியே அறையில் படுத்து கொண்டான் அவன். நன்றாக தூங்கிய கோபாலனுக்கு கனவு வந்தது. கோபாலன் கண்ட கனவில் தன்னையே கண்டான். அப்படி கண்ட கோபாலனை, நாம் ***கனவு கோபாலன்*** என்று வைத்து கொள்வோம். கனவு கோபாலன் பரிக்ஷை எழுதி தோல்வி கண்டு விட்டான். அதனால் மிகவும் மனமுடைந்து போனான். கனவு கோபாலன் வியாபாரம் செய்தான். அதில் நஷ்டம் எய்தினான். அதனால் தாங்க முடியாத துக்கம் அடைந்தான். கனவு கோபாலன் சில தவறுகளை செய்து விட்டு, அதற்காக தண்டனைகளையும் அடைந்து, அவமானப்பட்டான். திடீரென்று கனவு கலைந்தது. "சே? கண்ட நேரம் எல்லாம் கனவு" என்று நிம்மதி அடைந்தான். அதுபோல், நாமும் இந்த உலகத்தை, ஐந்து இந்திரியங்களால் நுகர்வது எல்லாம் கனவுதான். நாம், இப்பொழுது விழித்து கொண்டிருப்பது எல்லாம் உண்மையல்ல. ஆத்மாவே உண்மையான நாம். அந்த ஆத்மாவில் ஏற்படும் கனவுதான் இந்த மாய பிரபஞ்சம். இந்த பிரபஞ்ச நாடகத்தை நிறுத்தி அழித்து விட்டால், நாம் விழித்து கொண்டு எப்பொழுதும் சாஸ்வதமான ஆனந்தத்தில் இருக்கலாம். கனவு கோபாலன் "**உண்மையான ஒரு கோபாலன் உள்ளான். அவனுடைய கனவு சரீரம்தான் "நான்", என்பதை எப்படி அறியவில்லையோ அதுபோல ஆத்மாவின் கனவு உருவம்தான் நாம்**" என்பதை நாம் அறியாத வரையில் சோக, மோஹ, பயம் நம்மை விட்டு விலக போவதே இல்லை.

* மனிதனும் மனிதனும் ஆலிங்கனம் செய்து கொண்டார்களே! ஆனால், அவர்கள் எதை ஆலிங்கனம் செய்து



கொள்கிறார்கள்? (அ). எலும்பு, இரத்தம், மாமிசத்தையா? (ஆ). ஆன்மாவோ இரண்டல்ல (இ). மனதோ இருப்பே இல்லாதது. பின் எதை ஆலிங்கனம் செய்து கொள்கிறார்கள்?

* விலங்குகள் செய்யும் பல காரியங்கள் நமக்கு அருவருப்பை தரக்கூடியதாக உள்ளது. அதுபோல் நாம் செய்யக்கூடிய பல செயல்கள், தேவர்களுக்கு அருவருப்பை தரக்கூடியவை.

* மஹான்களிடமிருந்து அவர்களுடைய சங்கல்பம் இல்லாமலேயே அவர்களுடைய மஹிமைகள் வெளிப்படுவது எதற்காக? உலகத்தில் உள்ள துன்பங்களை போக்குவதற்காக அல்ல. உன்னுடைய இறை நம்பிக்கையை திடப்படுத்துவதற்காகவே ஆகும்.

* To do wrong unknowingly is a mistake. To repeat the wrong-doing knowingly is the greatest mistake!

* When you are not ready to seek apology after you have done wrong, your sense of prestige wins. However, when you are ready to apologise for the same, your ego is won over !

* True revolution has to happen in the heart, not merely in physical actions

* எது இருக்கின்றதோ அதைத்தான் செலவழிக்க முடியும். மஹான்களிடம் செலவழிப்பதற்கு மனதில் எந்த வாசனைகளும் இல்லை.

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Limited




## பாகவத பழம் (19)

– ஸ்ரீஸ்வாமிஜி

ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம், கடைசி சுலோகத்துடன் முடிந்ததோ இல்லையோ, வைகுண்டத்திலிருந்து ஒரு விமானம் வந்தது.

முக்தியை அடைய விரும்பும் ஒருவன் (யோகியாக இருந்தால்) மரண காலம் வந்தால், எல்லா புலன்களின் வாசல்களையும் மூடிவிட்டு, மூலாதாரத்தில் இருந்து சுஷும்னா நாடி வழியாக உயரக் கிளம்பி, புருவங்களின் மத்தியிலுள்ள ஸஹஸ்ரார சக்கரத்தை அடைந்து, அங்குள்ள விஷ்ணுவை வணங்கி, அவரது அனுமதி பெற்று, அவரது அருளால் கபாலத்தை உடைத்துக் கொண்டு, உயரக் கிளம்பி, அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்து, முதன்முதல் அக்னி, பகல் தேவதை, சுக்லபக்ஷ தேவதை, உத்தராயண தேவதை இவர்களால் கொண்டாடப்பட்டு, சூரிய மண்டலத்தையும் தாண்டி, அந்த அந்த உலகத்திலுள்ள தேவர்கள், சித்தர்கள் யாவராலும் பூஜிக்கப்பட்டு, பிறகு பரமபதத்திலிருந்து பகவானால் அனுப்பப்பட்டிருந்த பார்ஷதர்களான அமானவர்கள் என்பவர்களால் கரஸ்பர்ஸம் மூலம் சமாதானம் செய்யப்பட்டு, சம்சார யாத்திரை சிரமம் தீர்ந்து, பிரும்மாண்டத்தையும் தாண்டி, பிறகு காரிருள் எனத்தகும் அந்த அவ்யக்தமான பிரக்ருதியையும் தாண்டி, சுதர்சன சக்கர பிரகாசத்தினால் சொரூப ஞானம் பெற்று, அந்தப் பிரக்ருதியாகிய

> அவனுக்கு அப்படி ஒரு துன்பம் இருந்ததால், அவனுக்கு இதைவிட்டால், வேறு கதியும் இல்லை. நமக்கென்று இப்படி யார் செய்யப் போகிறார்கள் என்று நினைத்துக் கவனமுடன் கேட்டான். நீங்கள் அப்படிக் கேட்கவில்லை.

காரிருளைத் தள்ளிவிட்டு, சூஷ்ம சரீரத்தையும், பாவ புண்ணியங்களையும் உதறித் தள்ளிவிட்டு, திவ்ய பார்ஷத ஸ்வரூபம் பெற்று, விரஜா நதி ஸ்நானம் செய்து, விஷ்ணு பக்தர்களும், வைகுண்ட வனிதைகளும் உபசாரம் செய்ய, விஷ்ணு சாலோக்யத்தை அடைகிறான்.

அவ்வாறே விஷ்ணுவின் ரூபமுடைய விஷ்ணு தூதர்கள் வந்து துந்துகாரியை தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். துந்துகாரிக்கும் நான்கு கைகள், சங்கு, சக்கரம், கதை, தாமரை எல்லாம் வந்துவிட்டதாம்.

கதையைக் கேட்ட மற்றவர்கள் விஷ்ணு பார்ஷதர்களைப் பார்த்து, "இது என்ன ஓரவஞ்சனை? நாங்களும்தானே பாகவதம் கேட்டோம். அவனை மட்டும் அழைத்துச் செல்கின்றீர்களே!" என்றார்கள். அதற்கு விஷ்ணு பார்ஷதர்களோ, "அவன் எப்படி ச்ரத்தையுடன் ஒரு அக்ஷரம்கூட விடாமல் பாகவதம் கேட்டானோ, அப்படி நீங்கள் கேட்கவில்லை" என்றனர்.

*ஶ்ரவணம் து க்ருதம் ஸர்வை:*

*ந ததா மனனம் க்ருதம்| (மா: 5-71)*

"அவனுக்கு அப்படியொரு துன்பம் இருந்ததால், அவனுக்கு இதைவிட்டால் வேறு கதியும் இல்லை. நமக்கென்று இப்படி யார் செய்யப்போகிறார்கள் என்று நினைத்துக் கவனமுடன் கேட்டான். நீங்கள் அப்படிக் கேட்கவில்லை. எனினும், நீங்கள் பூமியில் இருந்து நிறைய ஸப்தாஹங்கள் கேட்டுவிட்டு, கடைசியில் வைகுண்டம் வாருங்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். வியாதியின் துன்பம் அதிகமாக இருக்கும்பொழுது, மருந்து எடுத்துக் கொள்வதில் காட்டும் கவனம், அந்த துன்பம் குறையக் குறைய கவனமும் குறைய ஆரம்பிக்கும், அதுபோல்தான் இது!

விஷ்ணு தூதர்கள் கூறியபடி, சாதுவான கோகர்ணன் மீண்டும் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் செய்ய, இப்பொழுது பாகவத ஸப்தாஹ



முடிவில், எவ்வாறு ஸ்ரீராமபிரானுடன் சரயூ நதியில் அயோத்தி மக்கள் யாவரும் இறங்கி வைகுண்டம் சென்றார்களோ, அதுபோல் கோகர்ணனும், உடன் கேட்டுக்கொண்டிருந்த அனைவரும் கோவிந்தனுடன் கோலோகம் சென்றனர். சனகாதிகள் இவ்வாறாக ஸ்ரீமத் பாகவத மாஹாத்மியத்தை நாரதர் முதலான ரிஷிகளுக்கும், பக்திதேவி, ஞானம், வைராக்யம், இவர்களுக்கும் கூறி முடித்தபின், ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ பாராயணத்திற்கான விதிமுறைகளை எடுத்துக் கூறினார்.

ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்திற்கான, ஒரு சுபமுகூர்த்தத்தை வேதம் படித்த ஒரு வைதிகரிடம் கேட்டு நிர்ணயிக்க வேண்டும். ஒரு திருமணத்திற்குச் செலவழிப்பதுபோல், ஒரு ஸப்தாஹத்திற்குச் செலவு செய்ய வேண்டும். அனைத்து இடங்களிலிருந்தும் விரக்தர்களையும், பாகவதர்களையும் பத்திரிகை எழுதி அழைக்க வேண்டும். வரும் அனைவருக்கும், தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். விசாலமாக இருக்கும் இடத்தையே ஸ்ரீமத் பாகவத படனத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். படனம் நடத்துமிடத்தை நன்கு சுத்தப்படுத்தி, துடைத்து மெழுகி, கோலமிடவேண்டும். மாவிலை, வாழை மரம் இவற்றால் நன்கு அலங்கரிக்கப்பட்ட மண்டபங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லோருக்கும் நல்ல ஆசனங்களை அமைத்திட வேண்டும். முக்கியமாகக் கதை சொல்பவருக்கு, மிகவும் உயர்ந்த ஆசனத்தை அளிக்கவேண்டும்.

"சம்சாரக்கடலில் முழ்கியிருக்கும் தீனனான என்னை, ஹே கருணைகடலே! கரையேற்றுவாய்!" என்று பிரார்த்தனை செய்து, ஸ்ரீமத் பாகவதத்திற்கும் விதிப்படி பூஜை செய்யவேண்டும். தூப, தீபங்கள் காண்பிக்க வேண்டும்.

கதை கூறுபவர் வடக்கு நோக்கி உட்கார்ந்து இருந்தால், கதை கேட்பவர்கள் கிழக்கு நோக்கி அமர வேண்டும். கதை கூறுபவர், கிழக்கு நோக்கி அமர்ந்து இருந்தால், கதை கேட்பவர்கள் வடக்கு நோக்கி அமர வேண்டும். விரக்தரான பாகவதோத்தமர், வேதசாஸ்திரங்களை அறிந்தவர், உவமைகள் கூறுவதில் வல்லவர்- இப்படிப்பட்ட ஒருவரைத்தான், கதை கூறுமாறு பிரார்த்திக்க வேண்டும்.

> ஸ்ரீமத் பாகவதம் ப்ரத்யக்ஷமான கிருஷ்ணனே! இந்த பிறவிக் கடலிலிருந்து விடுபட என்னால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனது இந்த ஆசை எவ்விதத் தடையுமின்றி உனது கிருபையால் நிறைவேற வேண்டும்; நான் உனது அடிமையல்லவா! ஹே கேசவா! என்று கூறி, பகவானுக்கு புஷ்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

பாகவதக் கதையைக் கூறுபவர், ஸப்தாஹம் ஆரம்பிக்கும் முந்தைய தினம் முகமழித்தல் செய்துகொள்ள வேண்டும். விடியற்காலையிலேயே காலைக்கடன்களை முடித்துவிட்டு, நீராடி, நித்யகர்மாக்களை சுருக்கமாக முடித்துவிட்டு, கதை நிர்விக்னமாக (தடங்கலின்றி) நடக்க, முதலில் மஹாகணபதியை பூஜை செய்ய வேண்டும். பித்ருக்களைத் தர்ப்பணத்தின் மூலம் திருப்தி செய்தபின், மண்டலங்கள் அமைத்து அதில் ஸ்ரீஹரியின் விக்ரஹத்தையோ, அல்லது சாளக்ராமத்தையோ வைக்க வேண்டும். பகவான் ஸ்ரீகிருஷ்ணனை மந்திரங்களினால் பூஜை செய்து அதன் முடிவில் வலம் வந்து, நமஸ்காரங்கள் செய்து, கீழ்வருமாறு ஸ்தோத்திரங்கள் செய்ய வேண்டும்.

*ஸம்ஸார - ஸாகரே மக்னம் தீனம் மாம் கருணாநிதே|*
*கர்மமோஹக்ருஹீதாங்கம் மாமுத்தர பவார்ணவாத்|| (மா:6-27)*

"சம்சாரக்கடலில் முழ்கியிருக்கும் தீனனான என்னை, ஹே



கருணைக்கடலே! கரையேற்றுவாய்!" என்று பிரார்த்தனை செய்து, ஸ்ரீமத் பாகவதத்திற்கும் விதிப்படி பூஜை செய்யவேண்டும். தூப, தீபங்கள் காண்பிக்க வேண்டும். கைகளில் ஒரு தேங்காயை வைத்துக்கொண்டு, நமஸ்கரித்து, பின்வருமாறு பிரார்த்திக்க வேண்டும்.

*ஸ்ரீமத் பாகவதாக்யோயம் ப்ரத்யக்ஷ: க்ருஷ்ண ஏவ ஹி|*
*ஸ்வீக்ருதோஸி மயா நாத முக்த்யர்த்தம் பவஸாகரே || (மா:6-30)*
*ஸ்ரீமனோரதோ மதீயோயம் ஸபல: ஸர்வதா த்வயா|*
*நிர்விக்னேனைவ கர்த்தவ்யோ தாஸோஹம் தவ கேஶவ || (மா:6-31)*

"ஸ்ரீமத் பாகவதம் ப்ரத்யக்ஷமான கிருஷ்ணனே! இந்த பிறவிக் கடலிலிருந்து விடுபட, என்னால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனது இந்த ஆசை எவ்விதத் தடையுமின்றி உனது கிருபையால் நிறைவேற வேண்டும்; நான் உனது அடிமையல்லவா! ஹே கேசவா! என்று கூறி, பகவானுக்கு புஷ்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும். கதை சொல்லவிருப்பவரையும் பூஜித்து, ஆடை அணிகலன்கள் அளித்து, கடைசியில் அவரையும் துதிக்க வேண்டும்.

*சுகரூப ப்ரபோதக்ஞ ஸர்வசாஸ்த்ரவிஸாரத|*
*ஏதத் கதாப்ரகாஸேன மதக்ஞானம் விநாஶய|| (மா:6-33)*

"ஹே! ஞானஸ்வரூபமான சுக முனிவரே! எல்லா சாஸ்திரங்களும் அறிந்த நீர் இந்த பாகவதக் கதையை விளக்கமாகச் சொல்லி, என் அறியாமையை விலக்குவீராக!" எனப் பிரார்த்தித்து, ஸ்ரீ சுகரைத் தியானிக்க வேண்டும்.

இதற்குப் பின் ஒரு வாரத்திற்கு, கதை கேட்பவர் சில முக்கிய நியமங்களை கடைபிடிப்பேன் என்று உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு, கதையில் எவ்விதத் தடையும் ஏற்படாமலிருக்க, ஐந்து அந்தணர்களை வைத்து துவாதசாக்ஷரி மந்திரத்தை ஏழு நாட்களும் ஜபம் செய்ய வேண்டும்.

(கனியும்)

*சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**டிசம்பர் 22 முதல் 28வரை** - மூன்றாவது வருடமாக சைதன்யமஹாபிரபு நாம பிஷா கேந்திரா சார்பில் நடத்தப்படும் "தெய்வத்தமிழ் இசை விழா" சென்னை மஹோதயா ஹாலில் மிக சிறப்பாக நடந்தேறியது. இந்நிகழ்ச்சியில் ஊத்துக்காடு வெங்கடகவி, கோபாலக்ருஷ்ண பாரதி, திருவருட்பா, திவ்யபிரபந்தம், தேவாரம், திருப்புகழ் ஆகிய தெய்வ தமிழ் பாடல்களை பல பிரபல கலைஞர்கள் மிக அழகாக பாடி ரசிகர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள்.

**டிசம்பர் 26, 28 - ஸ்ரீஸாந்தீபனி குருகுல டிரஸ்டு** சார்பாக டிசம்பர் 26ம் தேதியன்று மலைப்பட்டு அரசு பள்ளிக்கு இரும்பு பீரோ, நாற்காலி ஆகியவை வழங்கப்பட்டது. மேலும் மஹாரண்யம் அரசு பாலர் பள்ளிக்கு டிசம்பர் 28ம் தேதியன்று ரூ.23000 பெறுமானமுள்ள ஒலிபெருக்கி சாதனங்களும் வழங்கப்பட்டது.

**டிசம்பர் 27** அன்று மஹாரண்யம் ஸ்ரீகல்யாணஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் மிக சிறப்பாக **வைகுண்ட ஏகாதசி** கொண்டாடப்பட்டது. சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அன்பர்கள் வந்திருந்து குருவருளும் பெருமாளின் அருளும் பெற்று சென்றனர். தனுர் மாதம் முழுக்க அதிகாலை கோவிலில் பூஜை சிறப்பாக நடைபெற்றது. தனுர்மாதத்தில் மதுரபுரி ஆஸ்ரமத்தில் அத்யயன உத்ஸவம் வைணவ அன்பர்கள் பிரபந்தம் படிக்க நன்கு நடந்தது. சென்னை ப்ரேமிக பவனத்தில் பத்து நாட்கள் மாலை வேளையில் கீர்த்தனாவளியும் மிக நன்கு நடைபெற்றது.

**ஜனவரி 1** - காலை அசோக்நகர் மஹோதயாஹாலில் ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. சுமார் 1500அன்பர்கள் வந்திருந்து ஸ்ரீஸ்வாமிஜியின் ஆசீர்வாதத்தை பெற்று சென்றனர். ஸ்ரீஸ்வாமிஜி திருப்பதி பெருமாளின் சரித்திரத்தை மிக விரிவாக கூறி, பத்மாவதி தாயாரின் திருக்கல்யாண வைபவம் குறித்தும் பேசினார். அன்பரனைவரும்



ஸ்ரீஸ்வாமிஜியின் திருக்கரங்களினாலேயே பிரசாதம் பெற்றனர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

மாலை குரோம்பேட்டை விவேகானந்தா பள்ளியில் MAGIC SPELL மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை ஏற்பாடாகியிருந்தது. பல்வேறு நகரங்களிலிருந்தும் பல நாடுகளிலிருந்தும் கூட அன்பர்கள் வந்திருந்தனர். நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் சிங்கப்பூர் திரு.பாலசுப்ரமணியன், திருமதி.ராஜேஸ்வரி- மலேசியா, திரு.ரவி -ஆஸ்திரேலியா ஆகியோர் தங்களது நாம அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். ஸ்ரீஸ்வாமிஜி பல நாடுகளிலும் நாமகீர்த்தனம் செய்து வரும் நாமத்வார் அன்பர்களை கௌரவித்தார். மற்றும் பல அன்பர்களும் சத்சங்கத்தினரும் பேசினர்.

ஸ்ரீஸ்வாமிஜி, நிறைவாய் சுமார் 90நிமிடங்கள் நாமகீர்த்தனம், எத்தகைய அதிசயத்தக்க அற்புத விளைவினை மஹான்களின் வாழ்வில் நிகழ்த்தியிருக்கிறது என்று பேசினார். மேலும் சமீப காலங்களில் நாமகீர்த்தனம் செய்து வியத்தகு அருளை பெற்ற சில அன்பர்களின் அனுபவங்களையும் சுருக்கமாய் அருளினார். கூட்டுப்ப்ரார்த்தனையும் மஹாமந்திரமும் "நடத்தவே முடியாது என்பதை நடத்தி காட்டும் வல்லமை உடையது" என்பதே அவரது அருளுரையின் சாராம்சம் எனலாம். அனைவரும் பிறருக்கு மஹாமந்திரத்தின் நன்மைகளை எடுத்தியம்புவதோடு மட்டுமல்லாது தாங்களும் மஹாமந்திர கீர்த்தனம் செய்து வர வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். வந்திருந்த அனைத்து அன்பர்களுக்கும் பிரசாதமும் மஹாமந்திர குறுந்தகடும் ஏடும் கொடுக்கப்பட்டது.



**ஜனவரி 2,3** தேதிகளில் மாம்பலம் கோவிலூர் மடத்தில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டு பகவான்

யோகிராம்சுரத்குமார் அவர்களை பற்றி அருளுரையாற்றினார். திரளான அன்பர்கள் வந்திருந்து அருள் பெற்றனர்.

**ஜனவரி 14 - மகரசங்கராந்தி** பொங்கல் தினத்தன்று சென்னை பிரேமிக பவனத்தில் சூரியநாராயணருக்கு அழகான ஒரு பூஜை நடத்தப்பட்டது. உச்சிகால வேளையில் நடந்த இந்த பூஜையில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்.

**ஜனவரி 12 முதல் 18 வரை** - சென்னை ஆழ்வார்பேட்டை நாரதகானசபாவில் ஸ்ரீஸ்வாமிஜியின் பாகவத உபன்யாசம் ஏற்பாடாகியிருந்தது. அரங்கம் நிரம்பி தினமும் அன்பர்கள் வெளியே காத்திருந்து சிரவணம் செய்து சென்றனர். ஸ்ரீமத்பாகவதகாதை ஏழு நாட்கள் எடுத்தியம்ப போதாது என பேசிய ஸ்ரீஸ்வாமிஜி, பாகவதம் பிறந்த வரலாறு, நாரதரின் முற்பிறவி, துருவ சரித்திரம், பிரஹலாத சரித்திரம், அஜாமீள உபாக்யானம், அம்பரீஷ ராஜாவின் மஹத்துவம், க்ருஷ்ண ஜனனம், க்ருஷ்ண லீலைகள், ருக்மணி கல்யாணம் ஆகியவற்றை விரிவாக எடுத்து பேசினார். இதில் ஸ்ரீஸ்வாமிஜி பேசிய பல விஷயங்கள் இந்த இதழ் "சிந்தனை மலர்களில்" இடம் பெற்றிருக்கிறது (பக்கம் 6). தினமும் அனைத்து பக்தர்களுக்கும் திரு.ஸ்ரீநிவாசரத்னம் அவர்கள் பிரசாதம் ஏற்பாடு செய்திருந்தார். பூர்த்தி தினத்தன்று மஹாமஹோபாத்யாய முல்லைவாசல் Dr.க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், திருவண்ணாமலை பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நிர்வாகி நீதியரசர் ஸ்ரீஅருணாசலம் அவர்கள், நாரதகானசபா செயலாளர் அட்வகேட் ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி அவர்கள் ஆகியோர் உரையாற்றினர். அன்று ஸ்ரீஸ்வாமிஜியின் மேல் ஸ்ரீமுல்லைவாசல் க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் இயற்றிய ஸ்லோகத்தையே முதல் பக்கத்தில் பார்க்கிறீர்கள். தினமும் ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசத்திற்கு முன்பு செல்வி.பிரியங்கா ஆங்கிலத்தில் சுருக்கமாய் பக்த சரித்திரங்களை கூறி வந்தார்.

**ஜனவரி 20** - மதுரபுரி ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாளின்



பிரதிஷ்டா தினம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. திரளாய் அன்பர்கள் கலந்துகொண்டு, பெருமாளின் அருளை பெற்று சென்றனர்.

**ஜனவரி 23** - சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்கில் மாணவமணிகளுக்கான மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை இரண்டாயிரத்து ஐநூறு மாணவமாணவிகள் பங்கேற்க மிக நன்கு நடைபெற்றது. திரு.தோத்தாத்திரி, திரு.சத்யநாராயணன், திரு.சனத்குமார், திரு.குருமூர்த்தி ஆகியோர் மாணாக்கர்களை ஊக்குவித்து பேசினர்.



சனாதனப் புதிர் : பகுதி – 11 விடைகள்
–ஆத்ரேயன்



1. நான்கு வகையாக பிரிக்கலாம். குடீசகர், பஹூதகர், ஹம்ஸர், பரமஹம்ஸர் – முதல் மூன்று பிரிவினர் சாதகர்கள். நான்காவது பிரும்ம ஞானி. இவர்களில் ஸம்வர்த்தகன், ஆருணி, ச்வேதகேது, துர்வாசர், ரிபு, நிதாகன், ஜடபரதன், தத்தாத்ரேயன், ரைவதகன் பரமஹம்ஸ புங்கவர்கள் - (ஜாபாலோபநிஷத் 6-1)
2. இந்திரன், பிரஜாபதி, அஷ்டவசுக்கள், ஏகாதச ருத்திரர், த்வாதச ஆதித்யர்கள் ஆக 33 - (ப்ரஹதாரண்யகோபநிஷத் -3-9-2)
3. தரன், த்ருவன், சோமன், அஹ:, அனிலன், அனலன், ப்ரத்யூஷன், ப்ரபாஸன் ஆக எட்டு வசுக்கள்.
4. ஹரன், பஹூரூபன், த்ரியம்பகன், அபராஜிதன், வ்ருஷாகபி, சம்பு, கபர்தி, ரைவதன், ம்ருகவியாதன், சர்வன், கபாலி - இவர்கள் ஏகாதச ருத்திரர்கள்
5. தாதா, மித்திரன், அர்யமா, சக்ரன், வருணன், அம்சன், பகன், விவஸ்வான், பூஷா, சவிதா, த்வஷ்டா, விஷ்ணு - இவர்கள் த்வாதச ஆதித்யர்கள்
6. உத்திஷ்டத , ஜாக்ரத, ப்ராப்ய வரான் நிபோதத – காடகோபநிஷத் -1-3-14 - எழுந்திருங்கள், விழிப்புடன் இருங்கள் - குருவை அணுகி உபதேசத்தை கேளுங்கள் - ஆத்மசொரூபத்தை அறிந்து முக்தராகுங்கள்.
7. முண்டகோபநிஷத் வித்யையை பரா, அபரா என்று பிரிக்கிறது. ப்ரும்ம வித்யை ஒன்றே பரா வித்யை; மற்ற எல்லாம் அபரா; பரா என்றால் சிரேஷ்டம், உயர்வு, மேலானது என்று பொருள்.
8. முண்டகோபநிஷத் - 2-2-4. ப்ரணவோ தனு: சரோ ஹ்யாத்மா, ப்ரம்மதல்லக்ஷ்ய முச்யதே - ஜீவன் என்கிற பாணத்தை பிரம்மம் என்கிற லக்ஷ்யத்தில் சேர்ப்பதற்கு வேண்டிய வில்லே ஓம்காரம்.
9. பரத்வாஜனின் மகன் ஸுகேசன், சிபியின் மகன் ஸத்யகாமன், ஸௌர்யனின் மகன் கார்க்கியன், அச்வலனுடைய மகன் கௌசல்யன், ப்ருகுவின் மகன் வைதர்பி, காத்யனின் மகன் கபந்தி (ப்ரச்னோபநிஷத் -1-1)
10. அக்ஷரம் - ந க்ஷரதி இதி அக்ஷரம் - அழியா தத்துவம்; ஸ ஹோவாச ஏதத்வை ததக்ஷரம் கார்கி ப்ராஹ்மணா அபிவதந்தி - (ப்ரஹதாரண்யகோபநிஷத் =3.8.6)



## சனாதனப் புதிர் - பகுதி - 12

(பகுதி 12-ன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)


–ஆத்ரேயன்

1. ஸ்ரீதேசிகன் அருளிய கிரந்தங்கள் எத்தனை?
2. 28 ஸ்தோத்திர கிரந்தங்களில் (ஸ்ரீதேசிகனால் இயற்றப்பட்டது) மொத்தம் எத்தனை ஸ்லோகங்கள்? அவைகளில் பெரும்பாலானவை எந்த விருத்தங்களில் அமைக்கப்பட்டுள்ளன.
3. திரு.தேசிகனின் மனைவி மற்றும் மகனின் பெயர் என்ன?
4. வைராக்ய பஞ்சகம் திரு.தேசிகனால் எப்பொழுது இயற்றப்பட்டது?
5. உயர்ந்த தத்துவமான 'மகாவாக்கியங்கள்' எங்கே காணப்படுகின்றன?
6. பவபூதி எழுதிய நூல்கள் என்ன?
7. பாணர் படைத்த நூல்கள் எவை? எந்த அரசன் அவரை கௌரவித்தான்?
8. இந்துமதியின் புதல்வன், கணவர் யார்?
9. கசன் - இவர் யாருடைய பிள்ளை? இவர் யாரிடம் சென்று இறப்பவர்களை உய்ப்பிக்கும் மந்திரத்தை கற்றார்?
10. வேதாந்த தேசிகன் இயற்றிய "பாதுகா சகஸ்ரம்" எத்தனை ஸ்லோகங்கள் - எத்தனை பத்ததிகளை கொண்டது?

# பாலகர்களுக்கு ஒரு கதை



## குழப்பம் விலக்கு



குமரன் அதிகாலையில் எழுந்து நீராடினான். தூய்மையான உடைகளையும் அணிந்து கொண்டான். பக்கத்தில் உள்ள ஆலயத்திற்கு கிளம்பினான். ஆலயத்திற்கு செல்லும்பொழுது, அவனுடைய மனதில் பல தீய எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. அவன் அதை அடக்குவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் அவன் தோற்று போனான். அவன் கோவில் வாசலில் நின்று கொண்டான்.

மனதில், இத்தகைய தீய எண்ணங்கள் இருக்கும்பொழுது கோவிலுக்கு செல்வது சரி என்று அவனுக்கு தோன்றவில்லை. அங்கு நின்றபடியே இறைவனிடம், "இத்தகைய தீய எண்ணங்களுடன் கோவிலுக்குள் போகக்கூடாதல்லவா" என்றான். இறைவனும் "ஆமாம் போகக்கூடாது" என்றார்.

இறைவன் அவ்வாறு கூறியவுடன், கோவிலுக்கு செல்லாமல் வீட்டிற்கு திரும்பினான். வீட்டிற்கு நுழைவதற்கு முன் அவனுள், "இவ்வளவு தூரம் கோவிலுக்கு என்று சென்று விட்டு, இறைவனை வழிபடாமல் வந்தது பெரிய பாவம்" என்ற எண்ணம் தலை தூக்கியது. உடனே இறைவனிடம் "இறைவா இவ்வளவு தூரம் சென்று விட்டு உங்களை உள்ளே வந்து வழிபடாமல் வந்தது பெரிய பாவம் அல்லவா?" என்று


தீய எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. அவன் அதை அடக்குவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் அவன் தோற்று போனான்



கேட்டான்.


இறைவனும், "ஆமாம் நீ செய்தது பெரிய பாவம்தான்" என்றார். இந்த பதில் வந்தவுடன், இறைவன் தன்னை மிகவும் குழப்புவதாக அவனுக்கு தோன்றியது. இப்படி தோன்றியவுடன், நமக்கு ஏன் இப்படி தோன்றுகின்றது. நாம் இறைவனிடமே அல்லவா குறை பார்க்க ஆரம்பித்து விட்டோம் . இதை விட பெரிய பாவம் என்ன இருக்கின்றது என்று நினைத்தான். இறைவா! உன்னிடமே குறை பார்க்க ஆரம்பித்து விட்டேன், இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். உடனே நான் என்ன செய்ய வேண்டும் என்பதை இப்பொழுது கேட்கின்றாயே அதை முதலிலேயே கேட்டிருக்க வேண்டும் என்றார் இறைவன். அவ்வளவுதான், குமரன் திகைத்து போய் நின்றான்!

நாம் இறைவனிடமே அல்லவா குறை பார்க்க ஆரம்பித்து விட்டோம் . இதை விட பெரிய பாவம் என்ன இருக்கின்றது என்று நினைத்தான். இறைவா உன்னிடமே குறை பார்க்க ஆரம்பித்து விட்டேன், இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்.



# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி



## கர்தா க்ருஷ்ணதாஸ் பாபா -2

சிறிது வருடங்கள் கோவர்த்தனத்தில் இருந்த பின்பு பாபா ராதாகுண்டத்தில் வசிக்கலானார்.

ஒருமுறை ராதாகுண்டத்தின் உரிமையை குறித்து வ்ரஜவாசிகளுக்கும் வங்காளசாதுக்களுக்கும் ஒரு வழக்கு ஏற்பட்டது. வ்ரஜவாசிகள் "நாங்கள் வங்காள சாதுக்களை ராதாகுண்டத்தை தொட அனுமதிக்க மாட்டோம்" என்று கூறினார்கள். வங்காள சாதுக்களோ பாபாவிடம் சென்றனர். பாபா "நாம் வ்ரஜவாசிகளோடு சண்டை போடக்கூடாது. ராதாராணிக்கு நாம் குண்டத்தை தொடுவதில் இஷ்டமில்லை என்றால், நாம் அதை நிச்சயம் செய்யக்கூடாது" என்று பதில் கூறினார்.

ஸாதுக்கள் அனைவரும் அவர் கூறியபடியே நடந்தனர். கார்த்திகை மாதத்தின் க்ருஷ்ணாஷ்டமியன்று, ராதாகுண்டத்தில் குளிப்பது மிக உயர்ந்த பலனை அளிக்க வல்லது. பாபா அன்று ராதாகுண்டத்தில் குளிக்க மிகவும் ஆசைப்பட்டார். பரபரப்படைந்தார். ராதாகுண்டத்தின் கரையிலமர்ந்து, அவர் மனமுருகி ராதையை ப்ரார்த்திக்கலானார் "தயாமயி ராதே! நாங்கள் செய்த ஏதோ அபராதத்தினால்தான், உனது குண்டத்தில் ஸ்னானம் செய்யும் பாக்யத்தை இழந்தோம் என்று தெரியும். ஆனால் இன்று, எப்படியாவது உனது குண்டத்திலிருந்து சிறிது ஜலம் கிடைத்தால் நான் ப்ரோக்ஷணமாவது செய்து கொள்வேனே! அனுக்ரஹம் செய்வாய் " எனப்ரார்த்தித்தார்.



அச்சமயம்



அருகிலிருந்த குஞ்சார் எனும் கிராமத்திலிருந்து, சில வ்ரஜவாஸிகள் கைகளில் தடியோடு அங்கு வந்தனர். குண்டத்தில் ஸ்நானம் செய்வதற்காக, ஆடைகளை களைந்த பொழுது அவர்கள் அங்கே கண்ணீர் வடித்து கொண்டிருந்த பாபாவை கண்டனர்.

பாபாவிடம் அவர்கள் "பாபா! ஏன் தனியாக உட்கார்ந்து அழுது கொண்டிருக்கின்றீர்கள்? நிலா வந்து விட்டது. ஸ்நானம் செய்ய வேண்டிய காலமும் இதுதானே?" என்றனர்.

அப்பொழுது பாபா, அங்கிருந்த பிரச்சனையை விளக்கினார். அப்பொழுது அந்த விரஜவாஸிகள் அனைவரும் சேர்ந்து ஒரே குரலில் "பாபா! தாங்கள் நிச்சயம் ஸ்நானம் செய்ய வேண்டும். யார் உங்களை தடுக்கிறார்கள் என்று பார்க்கலாம்" என்று கூறி பாபாவை வலுக்கட்டாயமாக தூக்கி, குண்டத்தில் தூக்கி போட்டு விட்டார்கள். ராதாகுண்டத்தின் விரஜவாசிகள் மிகவும் எதிர்ப்பு தெரிவித்து ஆரவாரம் செய்தனர். ஆனால், அந்த குஞ்சார் விரஜவாசிகள் முன்பு அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் சென்ற பின்பு பெரிய கலவரம் நடக்கும் என்று எல்லோரும் அஞ்சினர். ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை.

மேலும் அன்றிரவே ராதா தேவி ராதாகுண்ட விரஜவாசிகளின் கனவில் தோன்றி "இது எனது குண்டம். இந்த சாதுக்களும் என்னுடையவர்கள். அவர்களை தடுக்க நீங்கள் யார்" என்று கேட்டாள்.

மறுநாள் காலை எல்லா விரஜவாசிகளும், பரஸ்பரம் தங்களது கனவை பகிர்ந்து கொண்டனர். அவர்களது தவறை உணர்ந்தனர். அனைவரும் சென்று கர்தா பாபாவின் பாதங்களில் விழுந்து மன்னிப்பு கோரினர்.

கர்தா பாபா நூதன் கேர் என்ற இடத்தில், 10-12 வருடங்கள் இருந்து பின் சித்தி அடைந்தார்.

வீட்டு மனைகள்
விற்பனைக்கு (PLOTS FOR SALE AT) ஸ்ரீப்ரேமிக வரதன் நகர், மாஹறாண்யம்

சிறப்பு அம்சங்கள்

*மலைகளும் ஏரிகளும் அமைந்த இயற்கை வளம் பெற்ற சூழல்

மேலும் சில
மனைகளே உள்ளன

*LAYOUT AREAவில் முழுமையான COMMON COMPOUND WALL மற்றும் விசாலமான தார் சாலைகள்

*உடனடியாக வீடு கட்டி குடியேற வசதியான இடம்

(For Details contact)

'VIJAY ASSOCIATES
' PH:9940043232

A-1 VIJAY VATICA, # 18/33, SARAVANA STREET, T-NAGAR, CHENNAI 600 017. PH: 99400 43232



## மாலே மணிவண்ணா – 81

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

நீயே எல்லாமாக இருக்கிறாய் எல்லோருமாகவும் இருக்கிறாய் என்று சொல்ல வருகிறார் பரிபாடல் ஆசிரியர்.

*66. அழல் புரை குழை கொழு நிழல் தரும் பல சினை*
*ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்*
*கால் வழக்கு அறு நிலைக்குன்றமும் பிறவும்*
*அவ்வவை மேய வேறு வேறு பெயரோய்*
*70. எவ்வயினோயும் நீயே*

(அழல் - நெருப்பு, குழை–தளிர், சினை - கிளைகள், கால் வழக்கு அறு நிலை– காற்று இயங்காத தன்மையுடைய , குன்றம் - மலை)

நெருப்பை ஒத்த சிவந்த தளிரையும், நிறைந்த நிழலைத் தருகின்ற பல கிளைகளையும் உடைய ஆல மரத்தின் கண்ணும், கடம்ப மரத்தினிடத்தும், ஆற்றிடைக்குறையிலும், காற்று சஞ்சரிக்க இயலாத மிக மிக உயர்ந்த மலையிடத்திலும், பிற இடங்களிலும் அவ்வவ்விடங்களில் பொருந்திய வேறு வேறு பெயரை உடையவனே! எல்லா இடங்களிலும் நீயே இருக்கின்றாய் என்று எம்பெருமான் எல்லாக்கடவுளராகவும் இருக்கின்ற பரம்பொருளாகிய பரம பொருள்தன்மையை விவரிக்கிறது பரிபாடல்.


*திருமாலும் 'ஆலமரத்தின் கீழ் உறைதல்' என்பதற்கு பொருத்தம் ஆனவரே என்பதற்கும் சங்க இலக்கியம் சான்று தருகிறது.*

விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் 386ஆவது திருநாமம் ஸம்ஸ்த்தாந: என்பதாகும். நிலை பெறும் இடம் அவனே. நிலைத்திருப்பது எல்லா இடங்களிலும் உண்மையான இருப்பு அவனுடையதே. எம்பெருமானுடைய இருப்பே எல்லா

உயிரினங்களின் இருப்பும் ஆகின்றது. அவனில்லாமல் எதுவும் இல்லை; எனவே எல்லாவற்றோடும் அவன் இருக்கின்றான். அவன் இருப்பே, உண்மையான இருப்பாகும். அதனால்தான், ஒன்று ஒன்றாக மாறினாலும், அந்த இருப்பு அழிவற்றதாக உள்ளது; கதிர் நெல்லாகிறது; நெல் அரிசியாகிறது; அரிசி சோறு ஆகிறது; சோறு இரத்தம் ஆகிறது; இரத்தம் தசை ஆகிறது; தசை மண் ஆகிறது என்று இப்படி மாறுதல் அடைந்து போனாலும் இருப்பு ஏதாவது ஒருவகையில் நிலைத்து இருக்கின்றது அல்லவா? அந்த இருப்புதான் அவர்.

> பரமபதம், திருப்பாற்கடல், சூரிய மண்டலம், யோகிகளின் இதயம், துருவ மண்டலம் முதலிய சிறந்த இருப்பிடங்களைக் கொண்டவர் என்றும் இத்திருநாமத்துக்கு பொருள் உரைக்கலாம்.

அதையே இத்திருநாமம் "ஸம்ஸ்த்தாந:" என்கின்றது. பரமபதம், திருப்பாற்கடல், சூரிய மண்டலம், யோகிகளின் இதயம், துருவ மண்டலம் முதலிய சிறந்த இருப்பிடங்களைக் கொண்டவர் என்றும் இத்திருநாமத்துக்கு பொருள் உரைக்கலாம். இக்கருத்தையே பரிபாடல்,



"ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும் கால்வழக்கு அறுநிலைக் குன்றமும் பிறவும் அவ்வவை மேய வேறு வேறு பெயரோய்" என்று எடுத்துக்காட்டுகிறது. இதனை தனித்தனியாக இனி காண்போம்.

புறநானூறு 198ஆம் பாடலில் "ஆலமர் கடவுள்" என்றும் , 199ஆம் பாடலில் கடவுள் ஆலத்து என்றும், ஆலமரத்தில் கடவுள் உறைதல்





சொல்லப் பெறுகிறது. கலித்தொகையில் சிவபெருமானைக் குறிப்பிடும் இடத்தில் "ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்" ஆலமர் செல்வன் (கலி 81,83) என வரும். திருமுருகாற்று படையுள் முருகனை "ஆல்கெழுகடவுள் புதல்வ" (256) என்பர் நக்கீரர். எனவே வடவால விருக்ஷத்தின் கீழிருந்து நால்வருக்கு உபதேசம் செய்த தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபெருமானே ஆலின் கீழ் இருந்தவன் எனலாம்.

புறநானூற்று 198ஆம் பாடலுக்கு உரை எழுதிய பழைய உரைகாரர், "ஆலமர் கடவுள்" என்பதற்கு ஆலிலையின் மேவிய திருமால் என்று உரை எழுதி "ஆலின் கீழ் அமர்ந்த முக்கட்செல்வனாகிய கடவுள்" என்று விளக்க உரையிலும் எடுத்து காட்டினார். ஆலின் கீழ் உறைதல் இரு கடவுளர்க்கும் ஒப்ப முடிந்ததே. ஆயினும் ஆலமரமா, இலையா என்பதில் இருவருக்கும் வேறுபாடுள்ளது என்று சிலர் கருதக்கூடும்.

> ஒன்று ஒன்றாக மாறினாலும் அந்த இருப்பு அழிவற்றதாக உள்ளது. கதிர் நெல்லாகிறது. நெல் அரிசியாகிறது. அரிசி சோறு ஆகிறது. சோறு இரத்தம் ஆகிறது. இரத்தம் தசை ஆகிறது. தசை மண் ஆகிறது என்று இப்படி மாறுதல் அடைந்து போனாலும் இருப்பு ஏதாவது ஒருவகையில் நிலைத்து இருகின்றது அல்லவா? அந்த இருப்புதான் அவர்.

திருமாலும் 'ஆலமரத்தின் கீழ் உறைதல்' என்பதற்கு பொருத்தமானவரே என்பதற்கும் சங்க இலக்கியம் சான்று தருகிறது.

(தொடரும்)

**அக்ஷரமணமாலை** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-166)

மலை மருந்திட நீ மலைத்திடவோ வருண்
மலைமருந்தாயொளி ரருணாசலா

பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் குதிரையை ஆட்டுவிக்கும் ஒருவன் உள்ளது போல், நம்மை உள் இருக்கும் ஈஸ்வரன்தான் ஆட்டுவிக்கிறான். கோபுரங்களின் அடியில் உள்ள சில பொம்மைகள், தம் தலையில், உயரமான கோபுரத்தை தாங்குவது போல் தோன்றினாலும் அவை கோபுரத்தை தாங்குவதில்லை. அதுபோல் நாம் உலகை நடத்துவதாக நினைக்கிறோம். உண்மையில் ஈஸ்வரனே நடத்துகிறான்.

"சரீரமே நான்" என்பது ஒரு 'மலை' அளவு உள்ளது. எவ்வளவுதான் உலகம் பொய்யானது என்றும் சரீரம் நாமல்ல என்று கேட்டாலும் அது அனுபவத்தில் இல்லை. இதை அடிக்கடி ஸ்மரிப்பதற்கு காரணம் அது அனுபவத்தில் வர வேண்டும் என்பதற்குத்தான்.

மாடு நெல்லை சாப்பிட வந்தால், அதை அடித்து துரத்தி விடுவர். அடி வாங்கிய ஞாபகம் இருக்கும் வரை, மாடு நெல் அருகில் வராது. அது தான் வாங்கிய அடியை மறந்தால், மறுபடி நெல்லை சாப்பிட வரும். அது போல் பக்குவமில்லாது துறவறம் மேற்கொண்டால், மறுபடி உலக வாழ்க்கை வாழவும் தோன்றக்கூடும்.

துறவறமோ, ஞானமோ உலக துக்கத்தினால் வரக்கூடியது அல்ல. துக்கத்தினால் மனதில் ஏற்படும் வைராக்கியம் என்பது துக்கானுபவம் இருக்கும் வரையில்தான் இருக்கும். அந்த துக்கம் விலகினால் மறுபடி மாயையின் ஆதிக்கம் வந்து விடும். ஆக துக்கம் மாயை விலகுவதற்கான சரியான மருந்தாக இருக்க முடியாது.

ரமண மஹரிஷிகளுக்கு புற்று நோய் வந்த பொழுதும் சிறிதும், சஞ்சலமற்றவராய், அதனால் பாதிக்கப்படாதவராய் இருந்தார். ப்ரும்மானுபவ நிலை என ஒன்று உள்ளது என்பதை நிரூபிப்பதற்குத்தான் ஞானிகளுக்கு துன்பம் வருகிறது.

பக்தர்கள் "இறைவா! நீ ஆயிரம் கோடி மின்னல் போல் தோன்றினாயே!" என்கின்றனர். இறைவனின் அருளால் அப்படி கிடைக்கப்பெறும் தரிசனம்தான், மாயை விலகுவதற்கான மருந்து. அந்த தரிசனம் கிடைக்கப்பெற்றால், அந்த திகைப்பினால், மற்றொன்றை நினைக்கவே முடியாது.

பண்டரீபுரத்தில் சேனாநாயி எனும் நாவித பக்தர் பொருட்டு



பாண்டுரங்கன் மொகாலாய ராஜாவிற்கே தரிசனம் கொடுத்து ஆட்கொண்டான். அதன்பின் ராஜா அந்த தரிசன ஞாபகமாகவே ராஜ சபையிலும் இருந்தான் என்பது தெரிய வருகிறது. (தன் பக்தனான நாவிதனை ராஜா சரியாக பார்த்து கொண்டதால் இறைதரிசனம் அவனுக்கு கிடைத்து). சாது சங்க மஹிமை அது.

மாயையானது மலை போல் கடக்க முடியாதது. அதை கடக்க குரு அல்லது இறைவனின் அருள் எனும் மருந்து தேவை. அந்த மருந்து கிடைத்தால் என்னவாகுமென்றால், "மலைத்திடவோ" - மறுபடியும் உலகில் மலைப்பு ஏற்படவே வாய்ப்பில்லை. "சரீரமே நான்" எனும் திகைப்பு விலகும்படியான - அப்படிப்பட்ட "மலை மருந்தாய்" - இறைவனின் பூரண தரிசனத்தை பிரார்த்திக்கிறார் ரமண மஹரிஷிகள்.

(தொடரும்)

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பிப்ரவரி 9, 26 | ஏகாதசி |
| பிப்ரவரி 4 | தேவி கருமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் - சிங்கப்பெருமாள் கோவிலை அருகில் தென்மேல்பாக்கம் |
| பிப்ரவரி 12 | மஹாசிவராத்திரி - மதுரபுரி ஜெயஹனுமான் பிரதிஷ்டா தினம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.